# கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள் New Thoughts in Teaching Learning



## முனைவர் பொ.ஜெயப்பிரகாசம் | Dr.P.Jeyaprakasam

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவை - 641028, jayaprakasam.p@hicas.ac.in

### ஆய்வுச்சுருக்கம்

வளரும் குழந்தைகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள் என்பதில் மாற்றமில்லை. கல்வியில் என் குழந்தை ஆர்வமில்லை என்று கூறுவது வேடிக்கையான ஒன்று. ஏனெனில் நம் கல்விமுறை அவனுக்கு ஏற்ற வகையில் கல்வி இல்லை என்பதே உண்மை. மாறி வரும் மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ப நம் கல்விமுறையில் மாற்றம் செய்வது அவசியம். நவீன தொழில்நுட்பங்களில் நம்மைக் காட்டிலும் அதிபுத்திசாலிகளாக மாணவர்கள் இருக்கிறார்கள். தொழில்நுட்பத்தோடு கூடிய பொழுதுபோக்குக்கு மட்டுமே அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே நாம் வகுப்பறையைக் கடந்துதான் போதிக்க வேண்டும். பாடங்களைக் கடந்து எண்ணற்ற தகவல்களைத் தருவதன் மூலமே கலவியாளர்களால் உயர்ந்த இடத்தைப் பெற முடியும்.

### Abstract

The old is in sleep and the new is gonna wake, this is the change caused by the event of time. The paper does not help zucchini, it is the vote of some people. Thus we can see that changes have been taking place since the beginning of the world. We see that the human condition undergoes great changes in the essential need for food, clothing, and shelter. Today the world is undergoing new changes in all fields as a result of the Green Revolution and the Industrial Revolution. Many changes have taken place in the field of education since then.

**திறவுச்சொற்கள் (Keywords):** கற்றல், கற்பித்தல், சிந்தனைகள், Thoughts, Teaching, Learning

### பெற்றோர்கள் செய்ய வேண்டியது

இன்றை தகவல் தொழில்நுட்பத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் கற்றறிந்தவர்களாக இருக்கிறார்கள். தன்னுடைய பணிநேரங்கள் போக ஓய்வு நேரங்களைக் குழந்தைகளோடு செலவிட வேண்டும். தன் புராணங்களை ஓதுவதனால் எந்தப் பயனும் எட்டிவிடப் போவதில்லை. நவீன நுட்பங்களை நாம் கற்பதோடு மட்டுமல்லாமல் தன் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டும். ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம் குறித்தும், தன் குழந்தையின் வகுப்பறைச் செயல்பாடுகள் குறித்தும் கேட்டுத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

### ஆசிரியர்களின் பங்கு

குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டும் காலம் மலையேறிப் போய்விட்டது. ஆகையால் ஆசிரியர்கள் வகுப்பறை தாண்டி உலக அறிவுகளைப் பெறுவது அவசியம். பாடங்களைக் கடந்து சென்றால் மட்டுமே மாணவனின் கவனத்தை நாம் பெற முடியும். தம் மாணவர்களுக்குத் தேவையான தகவல்தொழில்நுட்பக் கருவிகளைப் பெற்றுத் தருவது

கடமை. இதில் தனியார் பள்ளிகளைக் காட்டிலும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மாணவனின் நம்பிக்கையை வளர்த்தெடுக்க ஆசிரியர் நீராகவும், பெற்றோர்கள் உரமாகவும் இருத்தல் வேண்டும். எந்த நிலையில் மாணவனின் கல்வித்தரம் குறைந்துள்ளதோ அதனை உணர்ந்துகொண்டு நாம் செயல்பட வேண்டும்.

## கல்வியின் நிலைப்பாடு

கல்விமுறையைப் பள்ளி, கல்லூரி என்று பிரிக்கிறோம். அதாவது பள்ளிக்கல்வி, உயர்கல்வி என்ற இருநிலை. பள்ளிக்கல்வி அடித்தளம் போன்றது. கல்லூரிக் கல்வி கட்டிடம் போன்றது. இரண்டும் சரியாக அமைந்தால் மட்டுமே அது முழுமை பெறும். இதுவரை இயங்கிய கல்வித்துறைகள் அனைத்துமே தேர்வு, அது சார்ந்த சிந்தனை குறித்து மட்டுமே யோசித்துக் கொண்டிருந்தன. இதைக் கடந்த சிந்தனையை கல்வி அதிகாரிகள் யோசிக்க வேண்டும். மனப்பாடம், தேர்வு, மதிப்பெண் இவை கடந்த புதிய முறைகள் என்னென்ன என்பதை ஆராய வேண்டும். ஆனால் அதைப் பற்றிய சிந்தனை வளர்ந்து வருகிறது என்பதில் மாற்றமில்லை, தகவல் பரிமாற்ற காலத்திற்குத் தகுந்தாற்போல் கல்வியை வழங்க, நவீன தகவல் தொடர்பு நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம். இதற்குக் கல்வியாளர்கள், முதல்வர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் தொழில்நுணுக்கங்கள், நிதி, கட்டுமானத் தேவைகள் போன்றவற்றில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். இன்றைய ஆசிரியர்கள் உலகின் மாற்றங்களுக்கு ஏற்ப ஆயத்தமாகி விட்டார்கள். கற்றலுக்குத் தேவையன நவீன கருவிகளைத் தேடி ஓடுகிறார்கள். ஆசிரியர்களோடு மாணவர்களும் சேர்ந்து பயணிக்கிறார்கள். கற்றலுக்கான செயலிகளை உருவாக்குவதிலும் அதனைப் பயன்படுத்துவதிலும் தீவிரம் காட்டி வருகிறார்கள். இதன் காரணமாக பெற்றோர், ஆசிரியர் மாணவர் மனநிலையில் மாற்றத்தை உணர முடிகிறது. நவீன கட்டமைப்புகளை எளிதில் புனரமைக்கும் ஆசிரியர்களைப் பெற்றிருப்பது ஒரு வரப்பிரசாதமே.

## இணையத்தின் பங்கு

இணையம் கல்வியின் முதன்மை ஆசானாக விளங்குகிறது. ஆரம்ப காலகட்டத்தில் இத்தகைய கல்விமுறைக்கு ஆதரவு இருந்ததாகத் தெரியவில்லை. பொதுநல அமைப்புகள், பெற்றோர்கள் எனப் பலரும் தங்கள் வாதங்களை முன்வைத்தனர். உலகத்தைச் சுற்றிய பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இயற்கைப் பேரிடர்கள் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள், கையடக்கக் கருவிகளின் பயன்பாடு, ஊரடங்கு எனப் பல காரணிகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. பள்ளிகளும் கல்லூரிகளிலும் இத்தகைய கல்விமுறை முதலில் சவாலாக இருந்தாலும் அதனை விரைவில் கற்றுக்கொண்டு வருகின்றனர். இத்தகைய கல்விமுறையை அரசும், தனியாரும் மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது.

இன்றைய கற்றல் கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணையத்தைப் பல வழிகளில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் கற்றல் தேவை அதிகரித்து வருகிறது. புலனம் (Whatsapp) அனுப்புதல், தொலைவரி (Telegram), சமூக ஊடகம், பல்லூடகம் (Multimedia) என்பனவற்றிற்கு மடிக்கணினி (Laptop), அட்டைக்கணினி (Tablet), திறன்பேசி (Smartphone) போன்ற கையடக்கக் கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களின் அன்றாட வாழ்வும் கற்கும் சூழலும் மாறிவிட்டது. இதனை "தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம், பல புதிய முறைகளில் தகவலைப் பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது" (தமிழ் மொழி கற்பித்தலில் இன்றைய போக்குகள், ப.208) எனச் செங்கோட்டையன் குறிப்பிடுவதன் மூலமும் அறியலாம்.

உலகளவில் தொழில்நுட்பப் பயன்பாட்டின் அனுபவங்களைப் பார்க்கும்போது, பெரும்பாலும் அவை கீழ்க்கண்ட தலைப்புகளுள் அடங்கும்.

- பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்றல்
- கல்வித்தொலைக்காட்சி
- கல்வி வானொலி
- இணையதளம் மூலம் ஆலோசனை வழங்குதல்
- இணைய நூலகங்கள் மூலம் ஆராய்தல்
- அறிவியல் தொழில்நுட்பத்தில் செயல்முறை வகுப்புகள்
- ஊடகங்களின் பயன்பாடு

## வானொலியும் தொலைக்காட்சியும்

வானொலி மூலம் தினமும் வகுப்பறையில் பாடங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. குறிப்பிட்ட தலைப்பிலான வானொலிப்பாடங்கள், இணையம் பயன்படுத்த முடியாதவருக்கு குறிப்பிட்ட அளவில், தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. இது ஆசிரியருக்கு உதவிகரமாக இருக்கும். பயிற்றுவிக்கும் முறையை மேம்படுத்தும். கல்வி கற்கும் திறன் இதன் மூலம் அதிகரிக்கும். இம்முறையால், கல்வி கற்கும் வாய்ப்பு மற்றும் தரம் மேம்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு, பாடங்களை எடுத்துச் செல்ல, இம்முறை சிறந்த மற்றும் குறைந்த செலவிலான முறையாகும்.

தொலைக்காட்சி பாடங்கள் - தற்போது ஆசிரியர் பேசுவது மட்டுமின்றி, நேயர்களுடன் உரையாடுவது, அவர்களை நிகழ்ச்சியுடன் ஒருங்கிணைப்பது போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. தொலைக்காட்சி கல்வி ஒலி ஒளிபரப்பில், பாடங்களின் தொகுப்பும், மற்றவைகளும் சேர்க்கப்பட்டு, கல்வி கற்றல் பணி எளிமையாக்கப்படுகிறது. பாடத்திட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பாடங்களை ஒளிபரப்புவது மட்டுமல்லாமல், பொதுவான கல்வி, வாழ்க்கைக்குத் தேவையான பல நிகழ்ச்சிகளை வழங்குவது வானொலிக்கு முக்கிய பணியாக உள்ளது. மேலும் முறையான பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கும், வசதி வாய்ப்பு குறைவாக உள்ள பள்ளிகளுக்கும் பேருதவியாக இருக்கும். ஓரிடத்தில் தயாரிக்கப்பட்ட தொலைக்கல்வி நிகழ்ச்சிகள் செயற்கைக்கோள் மூலம் குறிப்பிட்ட நேரத்தில் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளுக்கு ஒளிபரப்பப்படுகிறது. இதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. ஒவ்வொரு மணி நேரத்திலும் வெவ்வெறு பாடங்கள் விளக்கப்படுகின்றன. மாணவர்கள் இதன்மூலம் பல ஆசிரியர்களின் பாடங்களைக் கேட்டு விளக்கம் பெறுகின்றனர்.

கற்றல் கற்பித்தலுக்கான ஆசிரியர்களின் திட்டமிடல் மிகமிக அவசியமாகிறது. மாணவர்கள் வகுப்புக்குச் செல்வதற்கு முன்பே பாடத்திட்டங்களை இணையத்தின் வழியாக நடத்துவதற்குத் தான் முதலில் தயாராக வேண்டும். மாணவர்களுக்குச் சரியான நேரத்தில் சரியான தகவலைத் தர வேண்டும். இணைய இடையூறுகள் இருப்பின் அதற்கேற்ப நாம் ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். காணொலி உரை, இணைய வழியாக வாசித்தல், அதனைப் புரிந்து கொள்ளும் திறன் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். கற்றல் ஆவணங்களைக் கருவூலங்களில் இருந்து பெற்று மாணவர்களுக்கு நல்ல முறையில் வழங்க வேண்டும். எழுத்து, காணொளி, குரல்பதிவு, ஊடகம் போன்றவற்றில் கருவிகளைச் சரியாகப் பயன்படுத்தி மாணவர்களுடைய கற்றல் திறன்களை மேம்படுத்த வேண்டும்.

## கற்பித்தலுக்கான உத்திகள்

கற்பித்தலுக்கான உத்திகளை இன்று ஆசிரியர்களே பல்வேறு வழிகளில் கண்டுபிடித்து வருகின்றனர். குழுவாக இயங்கவும் தனியாகவும் இத்தகைய உத்திகளைக் கையாளுகின்றனர். மாணவர்களுக்கு எத்தகைய அடிப்படையில் கற்பித்தால் அவர்களுக்குப் புரியும் என்பதைத் தெரிவு செய்து கற்பிக்க வேண்டும். அதற்குத் தன்னுடைய வகுப்பறைகளை மகிழ்வாகவும் அதே நேரத்தில் பயனுள்ளதாகும் ஆக்குவது அவசியம். இது மாணவர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தூண்டுவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் சமூகத்தில் போராடுவதற்கும் துணையாக அமைகிறது. கற்பித்தலோடு மட்டுமல்லாமல் விவாதித்தல் முக்கிய பங்கு வகிக்கிறது. விவாதிக்கும்போது மாணவர்களுடைய கருத்தினையும் நாம் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது.

## விளையாட்டுப் போட்டிகள்

கற்பித்தல் ஒருவகை விளையாட்டு என்பதை நாம் உணர வேண்டும். விளையாட்டு வழியாகவும் மாணவர்களுக்கு எண்ணற்ற கருத்துக்களை வழங்கலாம். எந்தக் காலகட்டத்திலும் விளையாட்டு வகுப்பிற்கு மாணவர்கள் ஆர்வமாக இருப்பர். அத்தகைய விளையாட்டினை இன்று இணையம் வாயிலாக வினாடி-வினா என்ற அடிப்படையில் நாம் பிரித்துப் பயன்படுத்தலாம். முழுக்கமுழுக்க பாடம் தழுவிய கேள்விகளாக இல்லாமல் பாடம் அல்லாத மாணவர்களுக்குப் பிடித்தமான கேள்விகளையும் அதில் இணைத்துக் கேட்கும்போது மாணவர்கள் மகிழ்ச்சி அடைவதோடு புரிந்துகொள்வதற்கும் நல்லதொரு வாய்ப்பாக அமையும். இதற்கான செயலிகள் பல நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய முறையில் பயிற்றுவிப்பதால் கால விரயம் தவிர்க்கப்படுகிறது.

## காட்சி வகுப்புகள்

காட்சி வகுப்புகள் என்பது PPT. இந்த அடிப்படையிலேயே பெரும்பாலான வகுப்புகள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடத்தப்படுகின்றன. ஒரு வாரம் வகுப்புக்கு முன்னரே தங்களை ஆசிரியர்கள் தயார்படுத்திக் கொள்கின்றனர். இதன்மூலம் கருத்துப் படங்களையும் இணைத்து காணொலிகளையும் இணைத்து மாணவர்களுக்குப் பாடம் புகட்டி வருகின்றனர். அதனை மாணவர்களுக்குக் கொடுக்கும்போது அவருடைய கற்றல்திறன் விரிவடைகிறது. இத்தகைய புதுமையான முறையை இனி வரும் காலகட்டங்களில் நேரடி வகுப்பாக இருந்தாலும் அனைத்துப் பள்ளிகளும் கல்லூரிகளும் இதனைச் செயல்படுத்த முனைந்து வருகின்றன. காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் இயற்கை போல தானும் மாறிக்கொள்ள வேண்டும் என்பது இயற்கையே. அதனை, கற்றல் கற்பித்தல் முறையில் நாம் மேம்படுத்துவதில் எந்தவிதத் தவறும் இல்லை. உலகின் பல நாடுகளில் கற்றல் கற்பித்தல் முறை என்பது பல நிலைகளில் மாறிய வண்ணமாக இருந்து வருவதை அறிகிறோம். எனவே அதற்கு ஏற்ப மாறுவதில் தவறில்லை. நம்முடைய முழு எண்ணமே மாணவர்களுடைய நலனாக இருப்பின் கற்றல் கற்பித்தல் முறையில் மாற்றம் தருவதில் தவறில்லை.

## சிக்கல்கள்

- மரபு வழியிலிருந்து மடிக்கணினி வழி கற்பிப்பதற்கு மனமாற்றம் ஏற்பட சிறிது காலம் தேவைப்படலாம்.
- சிறந்த பயிற்சியாளர்களைக் கண்டறிதல் கடினம்.
- மடிக்கணினி, ஆன்ட்ராய்ட் செயலி கொண்ட சாதனங்கள், tablet தேவைப்படுகிறது.

- வகுப்பறையில் ப்ரஜெக்டர், ஸ்மார்ட் போர்டு போன்ற தொழில்நுட்பக் கருவிகள் அவசியமாகின்றன.
- ஆசிரியர்கள் தங்களது அன்றாட அலுவல்களையும் தாண்டி சிறப்பு நேரம் ஒதுக்கிக் கற்பித்தல் வேண்டும்.
- அனைத்திற்கும் மேலாக மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தும்போது அதிலிருக்கும் நிறைகுறைகளை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

**தீர்வுகள்**

- மடிக்கணினி கற்பித்தலை பெரும்பாலும் ஏற்றுக் கொண்டனர்.
- கற்றுக் கொண்டவர்களே சிறந்த பயிற்சியாளர்களாக மாறி விட்டனர்.
- தனியார் நிறுவனங்கள் ப்ரஜெக்டர், ஸ்மார்ட் போர்டு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.
- ஆசிரியர்கள் சிரமத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டனர்.
- மாணவர்கள் நிறை , குறைகளை ஏற்கத் தயாராகி விட்டனர்.

**கல்வியை முடிக்கும் மாணவர்களிடம் எதிர்பார்ப்பவை**

1. நன்னெறிப் பண்புகள்
2. தன் திறமையில் நம்பிக்கை கொள்ளுதல்
3. குழுவாகச் செயல்படுதல்
4. படைப்பாக்கத் திறன்
5. மற்றவர்கள் கருத்துக்களைப் பாராட்டும் திறன்
6. சுய கற்றல்
7. மனதளவிலும் உடலளவிலும் பயிற்சி கொள்ளும் திறன்
8. தன் தேசத்திற்கும் தன் சுற்றத்தாருக்கும் நம்பிக்கையானவனாக இருத்தல்.

புதிய பாடத்திட்டத்தில் அந்தந்த தாய்மொழிக்கான வலுவான அடித்தளம் அமைக்க வேண்டும். இதனையே ஆய்வுக் குழுவானது பரிந்துரைத்துள்ளது. நல்ல மொழிநடையில் பயன்படுத்தும்போது மாணவர்களிடையே புரிதல் திறன் அதிகரிக்கிறது. இதனால் மாணவர்கள் பேச்சுத்தமிழில் இருந்து எழுத்து தமிழுக்கும், எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத் தமிழுக்கும் இயல்பாக மாற முடியும். தன்னம்பிக்கையோடு பேசுவதோடு மட்டுமல்லாமல் போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ள இது துணையாய் அமையும்.

**தாய்மொழியில் கற்பிப்பதால் வளரும் திறன்கள்**

1. பலதரப்பட்ட தேவைகளுக்கு நம் தாய்மொழியைப் பயன்படுத்துகிறோம்.
2. இடம் பொருள் ஏவல் ஆகியவற்றை உணர்வதற்கு மொழியறிவு பயன்படுகிறது.
3. கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக அமைகிறது.
4. நடைமுறைத் திறன்களை எளிதாக வெளிப்படுத்த, பாடங்களுடன் உயிரோட்டத்துடன் உறவாடப் பயன்படுகிறது.

**முடிவுரை**

கற்பித்தல் என்பது மாணவர்களின் மனத்திறனை வளர்த்து, ஆற்றலைக் கூர்மையடையச் செய்து அதன்வழி அவர்களின் அறிவாற்றலை வெளிக்கொண்டு வருவதாகும். கால மாற்றத்திற்கு ஏற்றாற்போல மாணவரின் மனநிலையும் மாறியுள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு விளக்கமுறை, செய்முறை போன்ற கல்வி கற்பிக்கும் முறைகளைக் குறைத்துக் கொண்டு கணினி, வானொலி, தொலைக்காட்சி, காணொலிக் காட்சி போன்றவற்றின் மூலம் கற்பித்தால் எந்த வழிக் கல்வி முறையாக இருந்தாலும் ( தமிழ்,

ஆங்கிலவழிக் கல்வி) மாணவர் திறம்படச் செயல்பட்டுக் கற்றுக் கொள்வர். மாணவரின் வாழ்நாள் முழுமைக்கும் எழும் சிக்கல்களைக் களைதல் என்பது மாணவனை நாட்டிற்கு நற்குடிமகனாக உருவாக்குதல் எனும் சால்புடைய செயலாக அமையக்கூடியதாகும்.

**துணைநின்றவை**


- திருமலை, மா.சு., (1998), தமிழ் கற்பித்தல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- கிருபானந்தன் க.வே., முதலியோர், (2009), கல்வியியலில் கணிணி, சென்னை: ஜி.வீ. பதிப்பகம்.
- முரளிதரன் இரா. & அருள்ராஜ் வே.சா., (2011), தமிழ் மொழி கற்பித்தலில் இன்றைய போக்குகள், தஞ்சாவூர்: நியூ விஷன் வெளியீட்டகம்.


******************

# காலந்தோறும் கற்றல், கற்பித்தல் Forever Learning and Teaching


## முனைவர் பா.கவிதா | Dr. P.Kavitha

தமிழ் - உதவிப்பேராசிரியர், பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், kavithapackiyam19@gmail.com, 7530016336, Assitant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore.

## முனைவர் ந.இராஜேந்திரன் | Dr. N.Rajendran

தமிழ் - உதவிப்பேராசிரியர், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், ilayavantamil@gmail.com, 9897536324. Assitant Professor of Tamil, Hindustan College of Arts and Science, Coimbatore.



**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மாணவனின் 'அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல் கல்வி' இக்கல்வியைப் பொருள் கொடுத்தேனும் கற்க வேண்டும் என்ற நிலை மாறி 'பிச்சை எடுத்தேனும் கல்வியைக் கற்க வேண்டும்' என்பது சீவலமாறனின் வாக்கு.

அர்ப்பணிப்புத்தான் ஆசிரியரின் அடையாளம். ஒரு மாணவன் சமூகத்தின் மிக உயரிய பொறுப்புக்குப் போகலாம். ஆனால், ஆசிரியர் இறுதிவரை ஆசிரியராகவே இருப்பார். அந்த மாணவன் என் வளர்ச்சிக்குக் காரணம் இந்த ஆசிரியர்தான் என்றுரைக்கும்போது ஆசிரியரின் மனம் நிறைவடைகிறது. விருட்சமாக வளர்ந்து நிற்கும் ஒவ்வொரு மாணவனின் வாழ்விலும் ஓர் ஆசிரியர் விதையாகப் புதைந்து கிடக்கிறார் என்பதுதான் உண்மை. இத்தகு ஆசிரியரைத் தேடிச் சென்று கல்வி கற்ற காலம் கால ஓட்டத்தில் கரைந்துபோனது. இன்று மாணவர்களைத் தேடி ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று கல்வி கற்பிக்கும் நிலை தற்காலத்தில் உருவெடுத்துள்ளது. இத்தகைய கல்வி முறையில் கற்றல் கற்பித்தல் காலந்தோறும் கடந்து வந்த பாதையைத் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Abstract**

Education Provides Knowledge. Sivalamaran said that you might beg for education. Commitment is the symbol of a good teacher. A student may achieve and can be in the